**<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், போளூர், திருவண்ணாமலை மாவட்டம்</u>**

2025 ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 6 ஆம் நாள் புதன்கிழமை 1873 ம் ஆண்டு 11 வது ஏற்பாட்டின்படி திருமதி.க. இந்துமதி, கிரேடு III பென்ச் கிளார்க் என்பவரால் ஆணையிட்டு உறுதி செய்யப்படுகிறது.

**OS.No.** 306/2017 பி.வா.சா.1 என்பவரின் வாக்குமூலம்

**பெயர்** : வேணுகோபால் **வயது** : 75

**த.பெ** : முருககவுண்டர் **தாலுக்கா** :

**கிராமம்** : காலசமுத்திரம் **தொழில்** : விவசாயம்

**<u>06.08.2025 – பி.வா.சா. 1 குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>**

1. எனக்கு 1978 ஜீன் 23 ம் தேதி திருமணம் நடைபெற்றது. என் திருமணத்திற்கு என் தகப்பனார் தோஷம் உள்ளது என்று ஒப்புக்கொள்ளவில்லை என்றால் தவறு. என் திருமணத்தின்போது 3 வது அயிட்ட சொத்து சர்வே எண்.162/3 பில் உள்ள மெத்தை வீட்டிற்கு மேற்கு பக்கம் கூரை வீடு இருந்ததா என்றால் இல்லை. மேற்படி கூரை வீட்டில் தான் நாங்கள் அனைவரும் குடியிருந்தோமா என்றால் இல்லை. மேற்படி கூரைவீட்டில் நாங்கள் எல்லோரும் குடியிருக்க முடியாது என்பதால் என் தம்பி மற்றும் என் தாயார் இருவரும் மெத்தை வீட்டிற்கு கிழக்கு புறம் உள்ள பொறம்போக்கு இடமான சர்வே எண்.92/7 ல் உள்ள 20 செண்ட் இடத்தில் கூரைவீடு கட்டி குடியேறிவிட்டனர் என்றால் நாங்கள் அனைவரும் இந்த கூரைவீட்டில் தான் குடியிருந்து வந்தோம்.

2. மேற்படி பொறம்போக்கு இடத்தில் கட்டிய வீட்டில் நானும் என் மனைவியும் எப்போதும் குடியிருந்ததது இல்லை என்றால் சரியல்ல. மேற்படி பொறம்போக்கு இடத்தை என் தகப்பனார் அனுபவித்து வந்தார் என்பதற்கு தண்ட தீர்வை ரசீதுகள் ஏதாவது தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். அப்படி எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. மேற்படி என் தம்பி தான் பொறம்போக்கு இடத்தை சீர்திருத்தம் செய்து 06.04.1981 ல் ஜர்காத் பட்டா பெற்று அனுபவித்து வந்தார் என்றால் என் தம்பி அவர் பெயரில் இடத்தை பெற்றபிறகு கட்டியிருக்கலாம், ஆனால் அதற்கு முன்பு என் தந்தை தான் அனுபவித்து வந்தார். ஜர்காத் பட்டா என் தம்பி மீது கொடுத்ததற்கு நான் தாசில்தாரிடம்

ஏதாவது புகார் அளித்தேனா என்றால் இந்த வழக்கு தாக்கல் செய்த பிறகு தான் எனக்கு தெரியும், என் தம்பி பெயரில் ஜர்காத் பட்டா சர்வே எண்.92/7 ல் கொடுக்கப்பட்டது என்றால் என் தம்பி எங்களுக்கு தெரியாமல் அவர் பெயரில் பட்டா பெற்றுக்கொண்டார், நான் கூறுவது தவறு, என் தம்பி தான் 92/7 சொத்தை அனுபவித்து வந்தார், என் தந்தை ஒரு சமயமும் பட்டா இடத்தை அனுபவித்தது கிடையாது என்றால் சரியல்ல.

3. நான் கூறுவது பொய் என்றால் சரியல்ல. என் தம்பி 1984 பிறகு இராணுவத்தில் சேர்ந்தார் என்றால் எனக்கு தெரியாது. 1984 ம் ஆண்டு தான் என் தம்பிக்கு அக்கா மகளுடன் திருமணம் நடைபெற்றது என்றால் சரிதான். அந்த காலகட்டத்தில் என் தகப்பனாருக்கும், என் தாயாருக்கும் பேச்சுவார்த்தை இல்லை என்றால் சரிதான். ஆகையால் தான் என் தம்பி திருமணத்தின்போது தகப்பனாரின் காலில் விழுந்து ஆசீர்வாதம் பெறுவதற்கு அவர் வரவில்லை என்றால் சரிதான், நானும், என் மனைவியும் தான் பாதபூஜையில் நின்றேன். என் தங்கை மற்றும் அக்கா லட்சுமி ஆகியோரின் திருமணத்திற்கு அவர் பாதபூஜையில் இருந்தார் என்றால் சரிதான். சர்வே எண்.92/7 ல் என் தம்பி செலவு செய்து வீடுகட்டினார் என்றால் சரிதான், வழக்கு தாக்கல் செய்தபிறகு தான் அவர் வீடு கட்டினார்.

4. தாவா 3 வது அயிட்ட சொத்திற்கு மேற்கில் நான் மெத்தைவீடு கட்டினேனா என்றால் வழக்கு தாக்கல் செய்தபிறகு தான் நான் கட்டினேன். சர்வே எண்.92/7 சொத்தானது என் தம்பி சேகருக்கான தனிப்பட்ட சொத்து என்றால் சரியல்ல, மேற்படி சொத்தை என் தந்தை ஒருபோதும் அனுபவித்தது இல்லை என்றால் சரியல்ல. என் தகப்பனாருக்கு குடிப்பழக்கம் இருந்ததா என்றால் எனக்கு தெரியாது. என் தகப்பனாருடைய குடிப்பழக்கத்தை பயன்படுத்தி நான் தாவா 4 வது அயிட்ட சொத்தை 3 ம் பிரதிவாதியான பால் உற்பத்தியாளர் கணேசன் என்பவருக்கு முயற்சித்தேன் என்றால் சரியல்ல. ஆகையால் தான் என் தம்பி என் பெயரிலும், என் தகப்பனார் மற்றும் கணேசன் பெயரிலும் வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் என் தகப்பனார் அவர் வைத்திய செலவிற்காக தான் தாவா 4 வது அயிட்ட சொத்தை விற்றார்.

5. மேற்படி சொத்தை விற்று பள்ளக்கொள்ளையில் நான் நிலம் வாங்கினேனா என்றால் சரியல்ல, நான் 1991 ல் இராணுவத்திலிருந்து வந்த பிறகு தான் மேற்படி பள்ளக்கொள்ளையில் உள்ள நிலத்தை 1994 ல் வாங்கினேன். வைத்தியசெலவு என்பது என்ன செலவு என்றால் எனக்கு தெரியாது. நான் வைத்தியசெலவு என்றும், குடும்ப செலவு என்றும் மாறி மாறி கூறுகிறேன் என்றால் சரியல்ல. ஆகையால், என் தம்பி சேகர் அவர்கள் என் மீதும், என் தகப்பனார் மற்றும் கணேசன் பெயரிலும் அசல் வழக்கு எண்.596/1988 தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். மேற்படி வழக்கில் நான் வி.டி.சுப்பிரமணி என்ற வழக்கறிஞர் மூலம் வழக்கை நடத்தினோம் என்றால் சரிதான்.

மேற்படி வழக்கில் நான் என் எதிர்வழக்குரையில் சொத்தை பிரித்து கொடுத்துவிட்டதாக கூறியிருக்கிறேன், ஆனால் அப்படி எதுவும் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல.

6. மேற்படி வழக்கு நிலுவையில் இருந்தபோது அசல் வழக்கு எண்.26/1990 என்ற வழக்கை சர்வே எண்.122/1 பில் மேல்பாதி 1 ½ ஏக்கர் சுந்தரேசன் பெயரில் செட்டில்மெண்ட் எழுதி வைத்தது செல்லாது என்றும், மேற்படி சொத்தில் எனக்கு பாதி பாகம் உரிமை உள்ளது என்று நான் தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். மேற்படி வழக்கு தாக்கல் செய்து 2 வருடங்களில் மற்றொரு வழக்கான அசல் வழக்கு எண்.489/1992 வழக்கை என் தகப்பனார் பெயரிலும், என் தம்பி சேகர் பெயரிலும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் சரியல்ல. மேற்படி வழக்கு தாக்கல் செய்தபிறகு தான் உயில் எழுதி வைக்கப்பட்டது என்றால் சரியல்ல. நான் கூறுவது பொய் என்றும், நான் இரண்டு வழக்குகள் தாக்கல் செய்துள்ளேன் என்றும் கூறுவது சரியல்ல. மேற்படி இரண்டு வழக்குகளும் சார்பு நீதிமன்றத்திற்கு சொத்து மதிப்பு அதிகமாக உள்ளதால் மாற்றம் செய்யப்பட்டது என்றால் சரிதான்.

7. வாதி சேகர் அவர்கள் 596/1988 வழக்கை திருவண்ணாமலை சார்பு நீதிமன்றத்தில் தாக்கல் செய்து அசல் வழக்கு எண்.282/1995 ஆக தாக்கல் செய்துள்ளார். ஆனால், நான் தாக்கல் செய்த இரண்டு வழக்குகளையும் நான் மீண்டும் தாக்கல் செய்யவில்லை என்றால் நான் தாக்கல் செய்யவில்லை. நான் மேற்படி வழக்கை நானும், என் தகப்பனாரும் வி.கோபால்சாமி மற்றும் வி.ஜே.முரணி ஆகிய வழக்கறிஞர்கள் மூலம் நடத்தினோம் என்றால் சரிதான். மேற்படி வழக்கில் நாங்கள் பதில் உரை தாக்கல் செய்யாததால் ஒருதலைபட்ச தீர்ப்பு பிறப்பிக்கப்பட்டது என்றால் சரிதான். அதன்பின்னர், சேகர் அவர்கள் இறுதிநிலை தீர்ப்பாணை கோரி திருவண்ணாமலை சார்பு நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்தார் என்றால் சரிதான். மேற்படி மனு நிலுவையில் இருக்கும்போது 07.08.1997 ல் என் தகப்பனார் இறந்துவிட்டார் என்றால் சரிதான். என் தகப்பனார் இறக்கும்போது என் தம்பி பஞ்சாபில் இராணுவ பணியில் இருந்தாரா என்றால் எனக்கு தெரியாது.

8. என் அக்கா, தம்பி, என் மாமா அவர்கள் என் தகப்பனாரின் இறுதி சடங்கில் கலந்துக்கொள்ள விடாமல் நான் அவர்களை துரத்திவிட்டேன் என்றால் சரியல்ல, ஆகையால் தான் அவர்கள் கலந்துகொள்ளவில்லை என்றால் சரியல்ல. என் தகப்பனார் இறந்தபிறகு வாரிசுதாரராக என் தாயார், என் அக்கா, என் தங்கை, நான் மற்றும் தம்பி ஆவோம். ஆகையால், மேற்படி வாரிசுகளை பிரதிவாதிகளாக வழக்கில் சேர்ப்பதற்காக மனு போட்டிருந்தார் என்றால் சரிதான். மேற்படி மனு அனுமதிக்கப்பட்டு, வழக்கு பரிகாரத்தில் எனக்கும் என் தம்பிக்கும் தலா 6/15 பாகம் மற்றும் 4, 5, 6 பிரதிவாதிகளுக்கு தலா 3/15 பாகம் என்றும் திருத்தப்பட்டது என்றால் சரிதான். மேற்படி வழக்கானது இந்நீதிமன்றத்திற்கு

மாற்றம் செய்யப்பட்டு அசல் வழக்கு எண்.136/2004 ஆக நடைபெற்று வருகிறது என்றால் சரிதான்.

9. மேற்படி வழக்கில் நீதிமன்ற ஆணையர் திரு.என்.எஸ்.குமரன் அவர்கள் வழக்கறிஞர் ஆணையராக நியமிக்கப்பட்டு, அவர் இடத்தை பார்வையிட்டு அறிக்கை தாக்கல் செய்தார் என்றால் எனக்கு தெரியாது. மேற்படி ஆணையர்அறிக்கையின் மீது எங்கள் தரப்பில் ஆட்சேபணை தாக்கல் செய்துள்ளோம் என்றால் வழக்கறிஞர் ஆணையர் இடத்தை பார்வையிட்ட விவரம் எனக்கு தெரியாது, சிறிது நேரம் கழித்து தான் தெரியும், ஆகையால் என் வழக்களிஞர் மூலம் ஆட்சேபணை தாக்கல் செய்தோம். எனக்கு அறிவிப்பு கொடுத்த பிறகு தான் வழக்கறிஞர் ஆணையர் நிலத்தை அளக்க வந்தார், நாங்கள் வேண்டுமென்றே அப்போது ஊரில் இல்லாமல் வெளியூரில் சென்று விட்டோம் என்றால் சரியல்ல. மேலும், நான் முதல்நிலை தீர்ப்பாணைக்கான ஒருதலைபட்ச தீர்ப்பை எதிர்த்து மனு தாக்கல் செய்து, மனு திருப்பப்பட்டது என்றால் சரிதான்.

10. மேற்படி மனுவானது காலதாமத மனுவுடன் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு, அனுமதிக்கப்பட்டது என்றால் சரிதான். மேலும், தற்போதுள்ள வழக்கறிஞர் மூலம் நாங்கள் எதிர்வழக்குரை தாக்கல் செய்து வழக்கை நடத்தி வருகிறோம் என்றால் சரிதான்.

**எதிர்தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**

Sd/-B.Salma,
District Munsif,
Polur.